**அஃகி அகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்**
**வெஃகி வெறிய செயின். ( கு.எண்.175)**

**பொருள் :** தரம் தெரியாமல் எல்லோரிடமும் பொருளைக் கவர விரும்பித் தகாதவற்றைச செய்தால், ஆழமாகவும் அகலமாகவும் படித்ததன் பயன்தான் யாதோ? வெஃகுதல் அறிவுடையார் செயல் ஆகாது.

**<u>பழனி நகராட்சி</u>**

**2019–ம்** ஆண்டு, மே மாதம் **30/05/2019–ம்** நாள் பிற்பகல் **4.00** மணியளவில் பழனி நகராட்சியில் சாதாரணக் கூட்டம் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெறும்

நகராட்சி அலுவலகம், பழனி.
நாள். 30 –05 –2019

தனி அலுவலர்/ஆணையாளர்
பழனி நகராட்சி

**<u>பொருள்கள்</u>**

**1)** பழநி நகராட்சியில் கோடைகால நீர்தேக்கில் அபிவிருத்தி பணிகள் மற்றும் நகரில் குடிநீர் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள KFW assisted (SMIF-TN-II-2) திட்டத்தின் கீழ் அரசு நிர்வாக அனுமதி வழங்கியதனை தொடர்ந்து, நகர்மன்ற தீர்மானம் எண்.**721**, நாள்.**31.01.2019** –ல் அனுமதிக்கப்பட்டு **26.02.2019–ம்** நாள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

**<u>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>**

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | EMD விபரம் | தொழில்நுட்ப தகுதி |
|---|---|---|---|
| 1 | M/s சரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ், 153, லட்சுமி புரம், பழனி. | ரூ.13,00,000/–வங்கி வரைவோலை எண்.276181/ கனரா வங்கி, பழனி தேதி–26.02.2019. | உள்ளது |
| 2 | திரு.பி.பழனிச்சாமி, வேலம்பட்டி, பழநி. | ரூ.13,00,000/–வங்கி வரைவோலை எண்.784166/ கனரா வங்கி, பழனி, தேதி–26.02.2019. | உள்ளது |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதியான ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி வாய்ந்ததாக இருந்ததால் **04/03/2019–ல்** விலைவிகித ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டது.

விலை விகித ஒப்பந்தப்புள்ளி திறந்து ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விபரம் |
|---|---|---|
| 1 | M/s சரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ், | **5.95**% மதிப்பீட்டு விலைக்கு கூடுதல். |
| | திரு.பி.பழனிச்சாமி, | **5.28**% மதிப்பீட்டு விலைக்கு கூடுதல் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திரு.பி.பழனிச்சாமி, ஒப்பந்ததாரர் வேலம்பட்டி, பழநி, மதிப்பீட்டு விலைவிகிதத்தினைவிட 5.28% கூடுதலாக பணி செய்ய ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளனர். அன்னாரிடம் **07/03/2019–ல்** விலை குறைப்பு கடிதம் கோரப்பட்டதில் **15/03/2019–ல்** விலைவாசி ஏற்றத்தின் காரணமாக ஏற்கனவே கொடுத்த ஒப்பந்தப்புள்ளி 5.28%-ல் இருந்து **4.95**% குறைத்துக் கொடுக்க சம்மதம் தெரிவித்து ஒப்புதல் கடிதம் கொடுத்துள்ளார். இதனை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.பழனிச்சாமி ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2) தற்போது உள்ளூரில் மணல் தட்டுப்பாடு மற்றும் பொருட்களின் விலை, ஆட்களின் கூலி மதிப்பீட்டிற்கு அதிகமாக இருப்பதை கருத்தில் கொண்டும், மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரினால் இவ்விலை விகிதங்களுக்கு குறைவாக ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறும் என உறுதியாக கூறுவதற்கில்லை என்பதுடன், பணியை மேலும் காலதாமதமின்றி மேற்கொண்டு முடிக்க ஏதுவாக விலைக்குறைப்பு செய்து மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 4.95% அதிகமாக வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க.எண்.4116/2018/இ2).**

**2)** பழநி நகட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கடைகளின் மேற்புறம் (Surki, tiles) மேற்கூறைத்தட்டு ஓடுகள், கழிவறை மராமத்துப் பணிகள் மற்றும் வர்ணம் பூசும் பணிக்கு பொது நிதி 2018–2019–ன் கீழ் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.20.00 இலட்சத்திற்கு மேற்கொள்ள தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி அளித்ததின் பேரில் 22.01.2019 –ம் தேதியன்று ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு,

| வ .எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விவரம் |
|---|---|---|
| 1. | திரு.பி.பழனிச்சாமி,<br>வேலம்பட்டி, பழநி. | 1.67 % மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2. | **திரு. நா.கருப்புச்சாமி ,**<br>18/32, டி.கே.எண்.புதூர்,<br>ஆயக்குடி (Po),<br>பழநி (Tk). | –0.03% மதிப்பீட்டிற்கு குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்2–ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் **திரு.நா.கருப்புச்சாமி,** என்பவர் –0.03 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள **திரு.நா.கருப்புச்சாமி,** –0.03 % ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை ஏற்கலாம்.

3) பழநி நகராட்சியில் தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் (DAY NULM) அனைத்து அரசு தலைமை மருத்துவமனையிலும் மேற்படி உட்புற நோயாளிகளுடன் உதவிக்கு வருபவர்கள் குறுகிய காலம் தங்கும் வகையில் ரூ.100.00 இலட்சத்தில் தங்கும் வளாகம் கட்டும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கூட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளவாறும் தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்கள் மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதிக்கு செயல்முறை உத்திரவு வழங்கியுள்ளதன்படி தனி அலுவலர் அவர்களின் 587–ஆம் எண்ணுள்ள 27/07/2018–ம் தேதிய கூட்டத்தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு 22.02.2019–ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விபரம்

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | EMD விபரம் | தொழில்நுட்ப தகுதி |
|---|---|---|---|
| 1. | M/s சரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ்,<br>153, லட்சுமி புரம், பழனி. | ரூ.1,00,000/–வங்கி வரைவோலை எண்.960030/ கனரா வங்கி, பழனி தேதி–21.02.2019. | உள்ளது |
| 2 | திரு.பி.பழனிச்சாமி,<br>வேலம்பட்டி, பழநி. | ரூ.1,00,000/–வங்கி வரைவோலை எண்.960029/ கனரா வங்கி, பழனி, தேதி–21.02.2019. | உள்ளது |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி வாய்ந்ததாக இருந்ததால் 26/02/2019–ல் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டது.

விலை விகித ஒப்பந்தப்புள்ளி திறந்து ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விபரம் |
|---|---|---|
| 1 | திரு.பி.பழனிச்சாமி, | 5.04% மதிப்பீட்டு விலைக்கு கூடுதல் |
| 2 | M/s சரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ், | 5.66 % மதிப்பீட்டு விலைக்கு கூடுதல். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திரு.பி.பழனிச்சாமி, பழநி, மதிப்பீட்டு விலைவிகிதத்தினைவிட **5.04%** கூடுதலாக பணி செய்ய ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளனர். அன்னாரிடம் **28/02/2019–ல்** விலை குறைப்பு கடிதம் கோரப்பட்டதில் **15/03/2019–ல்** விலைவாசி ஏற்றத்தின் காரணமாக ஏற்கனவே கொடுத்த ஒப்பந்தப்புள்ளி **5.04%-ல்** இருந்து **4.85%** குறைத்துக் கொடுக்க சம்மதம் தெரிவித்து ஒப்புதல் கடிதம் கொடுத்துள்ளார். இதனை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.பழனிச்சாமி, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2) ஒப்பந்ததாரரின் விலைக்குறைப்புக் கடிதத்தில் விலைக்குறைப்பு செய்து மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 4.85% அதிகமாக செய்து கொடுக்க சம்மதித்து வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க.எண்.1298/2019/இ1).**

**4)** பழநி நகராட்சியில் தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் (DAY NULM) நகர்புற வீடட்றோருக்கான தங்கும் மையம் (Urban Homeless) ரூ.**35.00** இலட்சத்தில் அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கூட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளவாறும் செயற்பொறியாளர் நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநரகம், மதுரை அவர்கள் மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதிக்கு செயல்முறை உத்திரவு வழங்கியுள்ளதன்படி தனி அலுவலர் அவர்களின் **590–ஆம்** எண்ணுள்ள **27/07/2018–ம்** தேதிய கூட்டத்தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு **22.02.2019–ம்** நாள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விபரம்

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | EMD விபரம் | தொழில்நுட்ப தகுதி |
|---|---|---|---|
| 1. | திரு.பி.பழனிச்சாமி,<br>வேலம்பட்டி, பழநி. | ரூ.35,000/–வங்கி வரைவோலை எண்.**960027**/ கனரா வங்கி, பழனி தேதி–**21.02.2019.** | உள்ளது |
| 2 | M/s சரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ்,<br>153, லட்சுமி புரம், பழனி | ரூ.35,000/–வங்கி வரைவோலை எண்.**960028**/ கனரா வங்கி, பழனி, தேதி–**21.02.2019.** | உள்ளது |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி வாய்ந்ததாக இருந்ததால் **26/02/2019–ல்** விலைவிகித ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டது.

விலை விகித ஒப்பந்தப்புள்ளி திறந்து ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விபரம் |
|---|---|---|
| 1 | திரு.பி.பழனிச்சாமி, | **4.99**% மதிப்பீட்டு விலைக்கு கூடுதல். |
| 2 | M/s சரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ் | **5.31**% மதிப்பீட்டு விலைக்கு கூடுதல் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த, திரு.பி.பழனிச்சாமி ஒப்பந்ததாரர் வேலம்பட்டி, பழநி, மதிப்பீட்டு விலைவிகிதத்தினைவிட 4.99% கூடுதலாக பணி செய்ய ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளனர். அன்னாரிடம் **28/02/2019–ல்** விலை குறைப்பு கடிதம் கோரப்பட்டதில் **15/03/2019–ல்** விலைவாசி ஏற்றத்தின் காரணமாக ஏற்கனவே கொடுத்த ஒப்பந்தப்புள்ளி **4.99%-ல்** இருந்து **4.68%** குறைத்துக் கொடுக்க சம்மதம் தெரிவித்து ஒப்புதல் கடிதம் கொடுத்துள்ளார். இதனை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.பழனிச்சாமி, ஒப்பந்ததாரர், ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2) ஒப்பந்ததாரரின் விலைக்குறைப்புக் கடிதத்தில் விலைக்குறைப்பு செய்து மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 4.68% அதிகமாக வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க.எண்.1298/2019/இ1).**

**5)** திண்டுக்கல் மாவட்டம், பழநி நகராட்சி அரசாணைநிலை எண். **1075**, நாள்.**14.12.1988**–ன்படி தேர்வு நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இந்நகராட்சிப் பகுதி புனிதமான கோவில் ஸ்தலமாக உள்ளதாலும் அதிக அளவில் உள்ளூர், வெளியூர் மாநில மற்றும் வெளிநாட்டவர்கள் வந்து செல்லும் இடமாக உள்ளது.

இந்நகராட்சியில் குடிநீர் விநியோகம் கோடைகாலநீர் தேக்கம் (SS Tank) பாலாறு தலைமை நீர் ஏற்று நிலையங்களில் நீர் ஆதாரங்களில் இருந்தும் குடிநீர் எடுக்கப்பட்டு பொது மக்களுக்கு நகரில் உள்ள ஏழு மேல்நிலைத்தொட்டிகளில் ஏற்றப்பட்டு குடிநீர் விநியோகம் தற்போது **3** நாட்களுக்கு ஒரு முறை விநியோகிக்கப்படுகிறது.

மேற்க்கண்ட குடிநீர் விநியோகத்தில் போதிய பணியாளர்கள் இல்லாததால், குடிநீர் விநியோகம் சீராக செயல்பட சிரமம்படுவதால் அவ்வப்போது மாவட்ட ஆட்சியரின் தரவிலைப்பட்டியல்படி மிகக்குறைந்த எண்ணிக்கையில் பணியாளர்களை பணியமர்த்தி குடிநீர் பணி மேற்கொள்ளப்படுகிறது. இருப்பினும் போதிய தொழில்நுட்ப பணிகளை செய்வதற்கு பணியாளர்கள் இல்லாததால் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள் மற்றும் நீரேற்று நிலையங்களில் உள்ள பில்டர்பெட் பராமரித்தல் பணிகள் மேற்கொள்வதில் மிகவும் சிரமம் ஏற்பட்டு குடிநீர் விநியோகம் தாமதப்படுகின்றது. நகரில் குடிநீர் விநியோகிக்கவும் மிகவும் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகின்றது. எனவே நகராட்சிப் பகுதிக்கு சுகாதாரமான குடிநீர் விரைவில் தங்குதடையின்றி வழங்கிட அரசாணை நிலை எண். **196**, நாள். **26.10.1998** –ன்படி குடிநீர் பணிக்கு தேவையான பணியாளர்கள் அளவுகோல்படி (பணியாளர்கள்மட்டும்) ஒப்பந்த அடிப்படையில் செய்திட மாதம் ஒன்றுக்கு ரூ.**9,00,000/–** (ஒன்பது இலட்சம் மட்டும்) ஓர் ஆண்டிற்கு **2019–2020** –ம் ஆண்டு ( ஆகஸ்ட் **2019** முதல் – ஜூலை **2020**) வரை செயல்படுத்திட மதிப்பீடு ரூ.**1,21,00,000/–** (ரூபாய் ஒருகோடியே இருபத்தி ஓர் இலட்சம் மட்டும்) தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் அத்தியாவசிய பணி ஆகையால் அவசியம் கருதி, பொதுமக்கள் நலன்கருதி நகராட்சி மொத்த வருவாயில் பணியாளர் ஊதியம் **49%** மேல் உள்ளதால் புதிய பணியாளர்களை அமர்த்திட இயலாத நிலையில் இப்பணிகளை தனியார் நிறுவனத்திற்கு ஒப்படைத்து செவ்வனே செயல்படுத்திட நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரனை அனுப்பி ஒப்புதல் மற்றும் நிர்வாக அனுமதி, தலைமைப் பொறியாளர் ஒப்புதல் பெற்று குடிநீர் நிதியில் செலவினம் மேற்க்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி கோரி பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் மன்றத்திற்குபொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

**1) மன்றம் அனுமதிக்கலாம்**

**2) செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்வும், ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னைக்கு கருத்துரு சமர்பிக்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3012 /2016/இ2).**

நகராட்சி அலுவலகம், பழனி.
நாள்.30 –05–2019

தனி அலுவலர்
பழனி நகராட்சி.